# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● அக்டோபர் 07, 2023

Weekly E-paper ● October 07, 2023


# தி.க.வும் – தி.மு.க.வும் உயிரும் உணர்வுமாய்..

சுப. வீரபாண்டியன்



## கமண்டலம் வீழும், மண்டல் வெல்லும்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## பம்பரங்கள் வீழும்!

தலையங்கம்

## மோடி அரசும் நெரிபடும் குரல்வளைகளும்

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● அக்டோபர் 07, 2023 Weekly E-paper ● October 07, 2023


# தி.க.வும் – தி.மு.க.வும் உயிரும் உணர்வுமாய்..

சுப. வீரபாண்டியன்





அது வெறும் பேச்சன்று! அழுத்தமான, ஆணித்தரமான பறைசாற்றல்! “பெரியார்தான் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு அரசுதான் பெரியார் “ என்று சொல்வதற்கு ஒரு முதலமைச்சருக்கு மிகப்பெரிய தெளிவும், துணிவும் வேண்டும். அது நம் முதலமைச்சரிடம் இருப்பது கண்டு வியப்படைகிறோம், பாராட்டுகிறோம், வணங்கி வரவேற்கிறோம்! அதுவும் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில், எங்கள் கொள்கை இதுதான் என்று அறிவித்ததன் மூலம், எண்ணிப் பார்க்க முடியாத உயரத்தை எட்டிப் பிடித்திருக்கிறார் நம் மாண்புமிகு முதலமைச்சர்!

ஏற்கனவே இதுபோன்று ,பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் இருவரும் அறிவித்திருக்கிறார்களே – ஏன், இன்றைய முதலமைச்சரும் கூட இப்படிச் சொல்லி இருக்கிறாரே – என்று கேட்கலாம். உண்மைதான்! ஆனால் இப்போது அதற்கான தேவை கூடுதலாக இருக்கிறது என்பதோடு, கருத்துப் பகைவர்கள் களத்தில் சூழ்ந்து இருக்கிற தருணத்தில், இதனை உறுதிப்படுத்துவது மிக மிகத் தேவையாகவும் காலத்திற்கு ஏற்றதாகவும் இருக்கிறது.

06.10.2023 அன்று தஞ்சையில் திராவிடர் கழகம் நடத்திய, கலைஞர் நூற்றாண்டு விழாவில் உரையாற்றும் போதுதான் முதல்வர் இந்தச் செய்திகளைக் குறிப்பிட்டார். “தி.க.வும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் என்பார்கள். நான் என் பார்வையில் இரண்டு கழகங்களும் உயிரும், உணர்வுமாய் இயங்குகின்றவை என்று சொல்கிறேன்” என்றும் அவர் உரத்து முழங்கினார்.

இப்போது அப்படி என்ன தேவை வந்துவிட்டது என்று நாம் கருதி விடக்கூடாது. அறநிலையத்துறை பற்றிப் பிரதமர் மோடியே பேசுகிறார் என்றால், பின்புலத்தில் ஏதோ ஒரு திட்டம் போடப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று பொருள். இன்றைக்கு நேற்றைக்கு இல்லை, ஒரு நூற்றாண்டுக்கு முன்பே நடைமுறைக்கு வந்த அந்தத் திட்டம் பற்றி இங்கே இருக்கும் சில்லறைகள் சிலர் பேசுவது வேறு! ஒரு நாட்டின் பிரதமர் பேசுவது என்பது வேறு!

இரண்டு நாள்களுக்கு முன்பு நம் முதலமைச்சர் அவர்கள் இதையும் ஒரு கூட்டத்தில் சுட்டிக் காட்டி இருக்கிறார். அவர் பேசிய அந்த மேடையில் இருந்த தினமலர் ஆசிரியர் போன்றவர்கள் அறநிலையத்துறையை அரசு கையில் வைத்திருப்பதை எதிர்க்கிறார்கள். ஆனால் அவரே ஒரு கோயிலில் அறங்காவலராக இருக்கிறார். அப்படியானால் அவரும் கோயிலை ஆக்கிரமித்து இருக்கிறவர்களில் ஒருவர்தானா என்று நம் கழகத்தின் தலைவர் முதல்வர் கேட்டிருக்கிறார்.

1907 ஆம் ஆண்டு தொடங்கி, “தர்ம ரட்சண சபை” போன்ற இந்துமதச் சார்புடைய அமைப்புகளே, கோயில்கள் குறிப்பிட்ட ஒரு சாதியினரின் சொத்தாக மாறிக்கொண்டிருப்பதை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்களை அரசுக்கும் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். அவற்றை அடிப்படையாகக் கொண்டே, நீதிக் கட்சியின் ஆட்சியில் அறநிலையத் துறை என ஒன்று உருவாக்கப்பட்டது.

காமராஜர் முதலமைச்சராக இருந்த காலத்திலும், இப்படிச் சில எதிர்ப்புகள் வந்தன. அப்போது முழுக்க முழுக்க இந்து மதச் சார்புடைய சர் சி.பி. ராமசாமி அய்யர் தலைமையில் போடப்பட்ட குழுவும் கூட, அறநிலையத்துறையின் தேவையையும், நியாயத்தையும் வலியுறுத்தித்தான் அறிக்கை தந்தது.

இப்போது மீண்டும் அதனை எழுப்புகிறார்கள். இது போன்ற சூழலில்தான், தி.க. விற்கும், தி.மு.க.விற்கும் இடையில் உள்ள உறவை, நெருக்கத்தை, உணர்வை, முதலமைச்சர் வெளிப்படுத்தி இருக்கிறார். முதலமைச்சரின் கொள்கை உறுதிக்கும், துணிவுக்கும், நம் தலை தாழ்ந்த வணக்கங்களும் பாராட்டுகளும்!!



# ஜாதிவாரி கணக்கெடுப்பு
# கமண்டலம் வீழும், மண்டல் வெல்லும்!

## வழக்கறிஞர் இராம.வைரமுத்து

சர்வதேச அளவில் முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பண்டைய எகிப்தில் கி.மு 570 ஆம் ஆண்டு அஹ்மோஸ் II என்ற மன்னரின் ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்டது. பண்டைய இந்தியாவில் முதன் முறையாக மௌரியப் பேரரசு ஆட்சியின் போது மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தற்போதைய இந்தியாவில் முதன்முறையாக 1872 ஆம் ஆண்டு நாடு தழுவிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த கணக்கெடுப்பில் ஜாதி, மதம், தொழில், வயது போன்றவை தனித்தனியாக ஆவணப் படுத்தப்பட்டன. இந்தியாவில் நடத்தப்பட்ட முதல் ஜாதி வாரி கணக்கெடுப்பும் இதுவே ஆகும். அதனைத் தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்தியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

1931ம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆறாவது மக்கள்தொகை கணக்கெடுப்பில் கல்வியறிவு, வாழ்வாதாரம் போன்ற தகவல்களும் திரட்டப்பட்டன. இந்தியாவில் இறுதியாக வெளியிடப்பட்ட ஜாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பும் இதுதான். அதன் பிறகு நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்புகளில் ஜாதிவாரி விவரங்கள் வெளியிடப்படவில்லை.

தமிழ்நாட்டில் முதன்முறையாக நீதிக்கட்சி, பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு வழங்கிய 44% இடஒதுக்கீடு, அண்ணல் அம்பேத்கரின் கோரிக்கையான பட்டியல் சமூகத்தினருக்குத் தனித் தொகுதிகள் போன்றவற்றுக்கு மட்டுமின்றி இன்று வரை இடஒதுக்கீடு வழங்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

இவ்வாறு இடஒதுக்கீட்டின் மூலம் தங்கள் ஆதிக்கத்திற்கு ஆபத்து வந்து விட்டதை உணர்ந்தப் பார்ப்பனர்கள், தொடர்ந்து ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவதற்கு முட்டுக்கட்டை போட்டனர். எவ்விதத் தரவுகளும் இன்றி உயர்ஜாதி பார்ப்பனர்களுக்கு 10% இட ஒதுக்கீடு பா.ஜ.க அரசால் வழங்கப்பட்டது. இந்தச் சமூக அநீதியை தடுத்து நிறுத்திட ஜாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் என்ற குரல் நாடெங்கும் ஒலிக்கத் தொடங்கியது.

ஒன்றிய அரசு மற்றும் உயர்ஜாதி பார்ப்பனர்களின் சூழ்ச்சியை முறியடித்து பீகாரில் ஜாதிவாரி கணக்கெடுப்பை முதல்வர் நிதிஷ்குமார் மற்றும் துணை முதல்வர் தேஜஸ்வி வெற்றிகரமாக நடத்தி முடித்தனர். அதன் விவரங்கள் அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளன்று வெளியிடப்பட்டது. இதில் பீகாரின் மொத்த மக்கள் தொகை 13 கோடியே 7 லட்சத்து 25

ஆயிரத்து 310 என்றும், ஜாதி ரீதியாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் - 36.01%, பிற்படுத்தப்பட்டோர் - 27.12%, பட்டியல் ஜாதி - 19.65%, இடஒதுக்கீடு இல்லாத உயர் ஜாதியினர் - 15.52%, பழங்குடியினர் - 1.68% என்றும், மத ரீதியாக இந்துக்கள் - 82%, முஸ்லிம்கள் - 17.7%, கிறிஸ்தவர் - 0.05%, பௌத்தர்கள் - 0.08%, சீக்கியர்கள் - 0.01%, எந்த மதத்தையும் பின்பற்றாதோர் - 0.0016% என்றும் கூறப்பட்டுள்ளது.

பீகாரைத் தொடர்ந்து ஒடிசா, கர்நாடகம் போன்ற மாநிலங்கள் ஜாதிவாரி கணக்கெடுப்பு விவரங்களை விரைவில் வெளியிட உள்ள நிலையில் நாடு தழுவிய ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்ற முழக்கத்தை காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ராகுல்காந்தி முன்வைத்துள்ளார்.

2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் அயோத்தியில் ராமர் கோவிலைத் திறந்து பிற்படுத்தப்பட்ட மக்களை பகடைக்காயாகப் பயன்படுத்தி மீண்டும் வெற்றிபெற நினைக்கும் பா.ஜ.கவை வீழ்த்த "ஜாதிவாரி கணக்கெடுப்பு" நடத்த வலியுறுத்துவதே சரியான யுக்தியாகும். அப்போது தான் தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்கள் ஏற்படுத்திய அரசியல் விழிப்புணர்ச்சியை இந்தியா முழுவதுமுள்ள பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஏற்படுத்த முடியும்.

கமண்டல அரசியல் வீழட்டும் !

மண்டல் அரசியல் வெல்லட்டும் !!

## கலைஞர் நூற்றாண்டு விழா!

(நெல்லை, மேலப்பாளையம், 01-10-2023)



*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பம்பரங்கள் வீழும்!

பிரதமர் மோடி நாடாளுமன்றத்திற்கு வந்ததை விட, வெளிநாடு சுற்றுப் பயணத்தில் இருந்ததே அதிகம்.

ஆளுநர் ஆர்.என்.ரவி ஆளுநராகப் பணி செய்ததைவிட, அரசியல்வாதியாக, மதவாதியாக, சனாதனவாதியாக செயல்பட்டுக் கொண்டு இருப்பதுதான் அதிகம்.

சனாதனம் வேண்டும் என்பார். மனுஸ்மிருதியைத் தூக்கிப் பிடிப்பார். புதிய கல்விக் கொள்கையே வளர்ச்சியைக் கொடுக்கும் என்பார். திராவிடத்தைப் பழிப்பார். இந்துத்துவாவைத் தாங்கிப் பிடிப்பார். மாநில அரசின் மசோதாக்களைக் கிடப்பில் போடுவார். அரசோடு ஒத்துழைக்க மாட்டார். சொன்னால் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

இந்நிலையில் 04-10-2023 அன்று காட்டுமன்னார் கோயிலுக்கு அருகில் நந்தனார் குருபூஜையில் நூறு ஆதிதிராவிடர்களுக்குப் பூணூல் அணிவிக்கப் போய்விட்டார்.

எதற்குப் பூணூல்? அது சமத்துவத்தைக் காட்டுகிறதாம். சொல்கிறார் ஆளுநர். 97 சதவீதம் பூணூல் போடுவதை விட, 3 சதவீதம் அதைக் கழற்றி விட்டாலே போதும். சமத்துவம் ஆகிவிடுமே?

சமத்துவம் பூணூலில் இல்லை. அது சமூக நீதியில் இருக்கிறது.

பூணூல் இரண்டு நிலைகளில் அணிவிக்கப் படுவதாகப் பேரறிஞர் அம்பேத்கர் 'சூத்திரர் யார்? என்ற ஆய்வு நூலில் சொல்கிறார்.

ஒன்று, கோத்திரம் தொடர்பாக தந்தையை முன்வைத்துச் செய்யும் பூணூல் 'சடங்கு'. இரண்டாவது 'உபநயணம்' என்று இரு பிறப்பாளர் என்ற அவர்களின் கொள்கையை நிறுவுவது.

இந்த இரண்டில் நந்தனார் குருபூஜையில் ஆளுநர் பார்வையில் நடந்த பூணூல் வைபவம் எதைக் குறித்தது என்று சொல்ல முடியுமா?

இந்திய அரசியல் சாசனத்தின்படி செயல்படுவதை விட்டுவிட்டு, அதற்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார் ஆளுநர்.

அமைதிச் சோலையாக இருக்கும் தமிழ்நாட்டில் சாதிய, பாலியல் வன்கொடுமைகள் அதிகமாக நடப்பதாகவும் அவர் பேசியிருக்கிறார்.

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் போன்ற வட மாநிலங்கள் அவர் கண்களுக்குத் தெரியாமல் போனதில் வியப்பு ஒன்றும் இல்லை.

பா.ஜ.க. ஆளும் மணிப்பூர் - பிரதமருக்கும் தெரியவில்லை, ஆளுநருக்கும் தெரிவில்லை. பம்பரம் சுழன்று ஆடுகிறது, ஆடிக்கொண்டே இருக்காது. வேகம் குறைந்தவுடன் வீழும்.

இன்னும் சில மாதங்கள்தான். பம்பரங்கள் வீழும், வீழ்த்துவர் மக்கள்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

## திராவிடப் பள்ளி நான்காம் ஆண்டுத் தொடக்க விழா!

**(சென்னை அன்பகம்..... 30-09-2023)**










# மோடி அரசும் நெரிபடும் குரல்வளைகளும்

**சாரதாதேவி**

இந்திய அச்சு ஊடகங்கள் ஒன்றிய நரேந்திர மோடி அரசின் வெளிப்படையான அச்சுறுத்தலுக்கும், கையூட்டுக்கும் சரணடைந்து, சார்புச் செய்திகளை மட்டுமே வெளியிட்டதன் விளைவு, நாம் மீண்டுமொருமுறை இந்த ஆட்சியை ஏற்க நேர்ந்தது.

“தைனிக் பாஸ்கர்”, “பாரத் சமாச்சார்”, “நியூஸ் லாண்டரி”, ”தி குயிண்ட்”, “கிரேட்டர் காஷ்மீர்”, “என்.டி.டிவி.”, “தி வயர்” உள்ளிட்ட மோடி அரசை விமர்சித்து உண்மைகளைப் பேசிய இந்திய இணைய ஊடக நிறுவனங்களும், ‘குஜராத் ஃபைல்ஸ்’ ஆவணப் படத்தை வெளியிட்டப் பன்னாட்டு ஊடகமான பி.பி.சி நிறுவனமும் ஒன்றிய சர்வாதிகார அரசின் அராஜகப் பிடிகளில் சிக்கித் தங்கள் குரல்களை இழந்திருக்கின்றன.

கடந்த செவ்வாய், 03.10.2023 அன்று “நியூஸ் கிளிக்” செய்தி நிறுவனமும், அவர்கள் தொடர்புடைய பல அறிவுசார் ஆளுமைகளின் வீடுகளும், அலுவலகங்களும், சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பல மென்பொருள் தகவல் சேமிப்புக் கருவிகளும், மடிக்கணினிகளும் கைப்பற்றப் பட்டிருக்கின்றன. ‘நியூஸ் கிளிக்’ இணையதளத்தின் நிறுவனரும் ஆசிரியருமான 76 வயது பிரபிர் புர்கயஸ்தாவும், அந்நிறுவனத்தின் மனிதவளப் பிரிவின் தலைவர் அமித் சக்ரவர்த்தியும் கைது செய்யப் பட்டுள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்டு 2 நாட்களாகியும் அவர்களிடம் எதனடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்பதற்கான முதல் தகவல் அறிக்கை கூட கொடுக்கப் படவில்லை. ஆனால் போலீஸ் காவலில் எடுத்திருக்கிறார்கள். பயங்கர ஆள்தூக்கிச் சட்டமான உபா (UPPA) எனப்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளின் கீழ் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




முன்னதாக அந்த நிறுவனத்திற்குத் தொடர்பு எனச் சொல்லி அவர்களால் 70 நாள்கள் கைது செய்யப்பட்டு அண்மையில் வெளிவந்த மனித உரிமைச் செயல்பாட்டாளரான டீஸ்டா செடல்வாடின் வீட்டிலும் சோதனை நடத்தி உள்ளார்கள். ஊடகவியலாளர்கள் ஊர்மிலேஷ், அவுனிந்த்யோ சக்ரவர்த்தி, அபிசார் ஷர்மா, பரஞ்சோய் குஹா தாகுர்தா மற்றும் வரலாற்றாசிரியர் சோஹைல் ஹாஷ்மி ஆகியோரை 25 கேள்விகளுடன் பல மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தி உள்ளனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்) யின் தலைவர் சீதாராம் யெச்சூரி அவர்களின் வீட்டையும் சோதனையிட்டு அங்கு தங்கியிருந்த அவருடைய விருந்தினர் சோஹைல்லின் மடிக்கணினி உள்ளிட்ட சாதனங்களை கைப்பற்றி உள்ளனர்.

இதெல்லாம் குடியுரிமை (திருத்த) சட்டத்திற்கு எதிராக, விவசாய (திருத்த) சட்டங்களுக்கு எதிராக, கோவிட் பெருந்தொற்றின் போது நடந்த போராட்டங்களைக் குறித்த செய்திகளை வெளியிட்டதற்கும் 2021 முதலே இந்த இணையதளத்தின் மீது கரம் வைத்திருக்கிறது மோடி அரசு. அதுமுதலே அமலாக்கத் துறை, வருமான வரித் துறை உள்ளிட்ட பல்வேறு விசாரணை அமைப்புகளால் ‘நியூஸ் க்ளிக்’ இணையதளம் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டது. அதன் ஆசிரியரைக் கைது செய்யக்கூடாது என்றும், இவ்வழக்கில் வன்முறைகள் கைக்கொள்ளக் கூடாது என்றும் டில்லி உயர் நீதிமன்றம் வலியுறுத்தி இருந்தது.

சென்ற ஆகஸ்ட் மாதம் 5ஆம் தேதி, அமெரிக்காவின் நியூயார்க் டைம்ஸ் இதழ், சீனாவில் தொழில் முதலீடு செய்திருக்கும் அமெரிக்கத் தொழிலதிபரான நெவில்ராய் சிங்கம் என்பவரின் சிங்கம் நிறுவனம் சட்டவிரோதமாகப் பணம் கொடுத்து, சீனாவுக்கு ஆதரவான செய்திகள் வெளியிடுவதாக ‘நியூஸ் க்ளிக்’ இணையதளத்தின் மீது ஆதாரமற்ற செய்தியை வெளியிட்டது. அடுத்த நாளே செய்தியாளர் சந்திப்பில் பேசிய ஒன்றிய தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் அனுராக் தாகூர், நியூஸ் க்ளிக் நிறுவனத்தைத் தாக்கிப் பேசி உள்ளார்.

வெறும்வாயை மென்றவர்களுக்கு, தேவையில்லாமல் ஒரு சட்டபூர்வமான செய்தியை, சட்டவிரோதம் போல வெளியிட்டு நியூயார்க் டைம்ஸ் அவல் அளித்தது. அதைக் காரணம் காட்டி ஒரு வெறியாட்டத்தை ஆடி, எஞ்சியிருக்கும் ஊடகவியலாளர்களையும் ஒடுக்குகிறது நரேந்திர மோடி அரசு.

இந்தியா கூட்டணி உள்ளிட்ட பல்வேறு எதிர்க்கட்சிகளும், ஊடகக் கூட்டமைப்புகளும், குடிமைச் சமூகங்களும், பன்னாட்டு அமைப்புகளும் போராட்டங்களை அறிவித்திருக்கின்றன. நியூயார்க் டைம்ஸ் செய்தி நிறுவனத்திற்கு எதிராக அமெரிக்க மக்களும் குரலெழுப்பி வருகின்றனர்.

இந்திய நாடு ஊடக சுதந்திரத்தில் 180 நாடுகளில், 161 ஆவது இடத்திலிருப்பது நரேந்திர மோடி அரசுக்கும் அவர்கள் புகழ் பாடும் சங்கிகளுக்கும் மிகுந்த மகிழ்ச்சியான செய்தியாக இருக்கலாம்! ஆனால், ‘இடிப்பாரை இலா ஏமரா மன்னன்’ கதை தெரிந்த நாம் வாளாவிருக்க இயலாது. ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian